**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**OS.No.74/2023**

**நாள்.06.08.2026**

பி.வா.சா.1 திரு.முனியராஜ் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். அவருடன் நான் சங்கு வியாபாரம் செய்தேன் என்றால் சரிதான். தமிழ்நாட்டிலும், கல்கத்தாவிலும் வியாபாரம் செய்துள்ளோம் என்றால் சரிதான். வாதி எங்களுக்கு சங்கு வாங்கி கொடுப்பார். அதை நாங்கள் கல்கத்தா போன்ற நகரங்களில் விற்று, பணத்தை வாதிக்கு கொடுப்போம் என்றால் சரிதான். அது போன்ற கொடுக்கல் வாங்கல் பல ஆண்டுகளாக நடந்து வந்தது என்றால் சரிதான். வாதியிடம் ரூ.10,00,000/- வாங்கிக்கொண்டு, ப்ரோ நோட் எழுதிக்கொடுத்ததாக என் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி ப்ரோ நோட்டை காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்று வழக்கு செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

சங்கை என்னிடம் அனுப்பும் போது, சங்கிற்கான தொகையை நிர்ணயித்துத்தான் அனுப்புவார் என்றால் சரிதான். சங்கை விற்ற வகையில் எனக்கு அதிக லாபம் கிடைத்ததாகவும், அந்த லாபத்தில் வாதி பங்கு கேட்டதாகவும், அதனால்தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு என்னை மிரட்டிவிட்டு சென்றார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

சங்கு தொழில் செய்வோர் மற்றும் சங்கு விற்போர் சங்கம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அது போன்று சங்கம் உள்ளது என்றாலும், அதில் நானும் உறுப்பினராக உள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி என்னை அவ்வாறு மிரட்டியதற்காக, நான் அந்த சங்கத்திலோ, காவல் நிலையத்திலோ புகார் எதுவும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.08.06 17:51:29 +0530

கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

21.04.2023 ம் தேதி போலிசார் என்னை மிரட்டியது குறித்து, நான் உயர் அதிகாரிகளிடமோ அல்லது எங்கள் சங்கத்திலோ எழுத்து மூலமான புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் மதுரை உயர்நீதிமன்றத்தில் போலிசார் மீது வழக்கு தொடுத்தேன். அந்த மனுவின் மீது மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால் சரிதான். அந்த உத்தரவில், எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றும், எவ்விதமான துன்புறுத்தலும் செய்யவில்லை என்றும் சொன்னதன் பேரில் அந்த மனு முடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

நான் காவல்நிலையத்திற்கு பலமுறை சென்றதாக சொல்லியுள்ள நிலையில், அங்கு வைத்து எனது செல்போனில் Selfie யோ அல்லது என்னுடன் வந்த நபரிடம் சொல்லியோ செல்போனில் போட்டோ எதுவும் எடுத்தேனா என்றால் இரண்டு போன்களையும் போலிசார் வாங்கி வைத்துக்கொண்டார்கள். அவ்வாறு இரண்டு செல்போன்களை போலிசார் வாங்கி வைத்துக்கொண்டார்கள் என்று எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் எனது செல்போன்களை வாங்கி வைத்துக்கொண்டது தொடர்பாக புகார், நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை.

நான் காவல் நிலையத்திற்கே போகவேயில்லை என்றாலும், நான் சொன்னது போன்று என்னை மிரட்டி ப்ரோ நோட்டில் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், எனது செல்போனை போலிசார் வாங்கி வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட விஷயங்களை வழக்கிற்காக தற்போது கூடுதலாக புனைந்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எனக்குத் தெரியாது. அந்த அறிவிப்பை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நான் வாதியிடம் பணம் வாங்கிக்கொண்டு,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.08.06 17:51:32 +0530

அதற்காக சாட்சிகள் முன்னிலையில் வா.சா.ஆ.1 ப்ரோ நோட் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது அந்த பணத்தை திரும்ப கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்ட பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.08.06 17:51:36 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .